## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பட்டுக்கோட்டை

**அசல் வழக்கு எண்.9/2018**

2024 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 06 ம் நாள் செவ்வாய் கிழமை வாதிகள் தரப்பு சாட்சியாகிய DW1 வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 வது விதியில் 9 வது பிரிவின் படி) உதவியாளர் திருமதி. ச.நித்யாஎன்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர் :** | முகமம்மது இக்பால் | **தொழில் :** | வியாபாரம் |
| **தந்தை/கணவர் பெயர் :** | கட்சி முகைதீன் | **சமயம் :** | முஸ்லீம் |
| **ஊர் :** | அதிராம்பட்டினம் | **வயது** | 65 |
| **தாலுக்கா :** | பட்டுக்கோட்டை | **சாதி:** | - |

**06.02.2024**

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவேன், நான் எனது முதன்மை சாட்சியத்தை மற்ற பிரதிவாதிகளுக்கு சார்பாகவும் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 25.02.2010 ல் 2 ம் எதிர்வாதிக்கு அவரது தந்தை எழுதிகொடுத்த இனாம் செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ 1** ஆகும்.
(வாதி தரப்பு வழக்கறிஞர் அசல் ஆவணத்தை தாக்கல் செய்யாமல் சான்றிட்ட நகல் தாக்கல் செய்ய முடியாது என ஆட்சேபனை தெரிவித்து ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்பட்டது.) 25.02.2010 ல் 3,4 எதிர்வாதிகளுக்கு அவரது தாய் வழி தாத்தா எழுதிக்கொடுத்த இனாம் செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல்

**பி.வா.சா.ஆ 2** ஆகும். (வாதி தரப்பு வழக்கறிஞர் அசல் ஆவணத்தை தாக்கல் செய்யாமல் சான்றிட்ட நகல் தாக்கல் செய்ய முடியாது என ஆட்சேபனை தெரிவித்து ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்பட்டது.) 11.04.2023 ல் புல எண் 317/6-க்கு பட்டுக்கோட்டை வட்டாட்சியர் வழங்கிய புல படம் அசல் **பி.வா.சா.ஆ 3** ஆகும். 13.08.2023 ல் புல எண் 317/6-க்கு பட்டுக்கோட்டை கூடுதல் துணை வட்டாட்சியர் வழங்கிய நத்தம் நிலவரி துாய சிட்டா உண்மை நகல் **பி.வா.சா.ஆ 4** ஆகும். 04.11.2022 ல் புல எண் 317/6-க்கு செட்டில்மெண்ட் பதிவேட்டின் நகல் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மூலம் பெறப்பட்ட சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ 5** ஆகும். 22.11.2018 ல் 2ம் எதிர்வாதியால், செல்வம் என்பவர் பெயரில் கொடுத்த புகாருக்கு அதிராம்பட்டினம் காவல் துறையினர் வழங்கிய ரசீதின் அசல் **பி.வா.சா.ஆ 6** ஆகும். 01.07.2021 ல் 1ம் எதிர்வாதி கொடுத்த புகாருக்கு அதிராம்பட்டினம் காவல் துறையினர் வழங்கிய ரசீதின் அசல் **பி.வா.சா.ஆ 7** ஆகும். 13.06.1958 ம் தேதியிட்ட கிரய பத்திரத்தின் பதிவு சான்று நகல் **பி.வா.சா.ஆ 8** ஆகும். 19.03.1999 ம் தேதியிட்ட கிரய பத்திரத்தின் பதிவு சான்று நகல் **பி.வா.சா.ஆ 9** ஆகும். 03.03.1977 ம் தேதியிட்ட கிரய பத்திரத்தின் பதிவு சான்று நகல் **பி.வா.சா.ஆ 10** ஆகும். தாவாவை தள்ளுபடி செய்யவேண்டுமென பிராத்திக்கிறேன்.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him/her to be Correct.*

Sd/- M. Ravichandran,B.A.,B.L.,
District Munsif, Pattukkottai.